## சுருக்கம்

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீடு – அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பது தொடர்பான திட்டங்களை செயல்படுத்திட 2023–2024–ஆம் நிதியாண்டிற்கு ரூ.44,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## பொது(மறுவாழ்வு.2(2))த் துறை

**அரசாணை(நிலை)எண்.461** **நாள்.24.07.2023.**

சோப கிருது வருடம், ஆடி–8
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06.10.2021.
2. அரசாணை (நிலை) எண்.783, பொது (மறுவாழ்வு.2)த் துறை, நாள் 06.12.2022.
3. அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.இ1/12707/2021, நாள் 24.04.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

"கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்று அங்கே குடியுரிமை பெற்றுள்ள தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் கற்கும் ஆர்வத்தை உருவாக்கிடவும், தமிழ் மொழியினை கற்றிட ஏதுவாகவும், தமிழ் பரப்புரைக்கழகம் மற்றும் தமிழ் இணைய கல்விக் கழகம் மூலமாக குழந்தைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுத்தல், அது மட்டுமின்றி அங்குள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிப்பதற்காக ஊக்கத் தொகை மற்றும் தமிழ் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்".

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் தெரிவித்துள்ள இனங்களுக்கு ஒப்புதல் கோரி அளித்த கருத்துருவிற்கு தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாக அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பது தொடர்பான திட்டத்திற்கு ரூ.44,00,000/-க்கு நிருவாக அனுமதியும், 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு ரூ.12,00,000/- நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீட்டில் வெளியிடப்பட்ட மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக ஏற்கனவே நிருவாக அனுமதி வழங்கப்பட்ட ரூ.44,00,000/-ஐ (ரூபாய் நாற்பத்தி நான்கு இலட்சம் மட்டும்) நடப்பு 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் கோரியுள்ளார்.

4. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 06.10.2021-ஆம் நாளிட்ட செய்தி வெளியீட்டு அறிவிப்பான "தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாக, அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பது தொடர்பான திட்டத்தினை" செயல்படுத்திட ஏதுவாக ஏற்கனவே நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ.44,00,000/-ற்கு நடப்பு 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.44.00 இலட்சம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"2235 சமூக பாதுகாப்பும் நலனும் 01 மறுவாழ்வு –
800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AH வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் 305 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லறைச் செலவுகள் – ரூ.2,00,000/-
(த.தொ.கு.2235 01 800 AH 30502)
333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம் – ரூ30,00,000/-
(த.தொ.கு.2235 01 800 AH 33302)
333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகைக் கொடுத்தல்-04 ஒப்பந்த ஊதியம் – ரூ.12,00,000/-
(த.தொ.கு. 2235 01 800 AH 33304)"

6. இவ்வரசாணை வெளியிட அரசாணை (நிலை)எண்.334, நிதி (வ.செ.பொ.1)த் துறை, நாள் 22.10.2022-இன்படி நிதித் துறையின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. நந்தகுமார்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை - 600 009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-9.

நகல்
மாநில கணக்காயர், சென்னை-18.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
சிறப்பு நேர்முகக் உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அலுவலகம்
நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.
பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.

இ.கோ/உதிரி.

**//அனுப்பப்படுகிறது//**

24/7/2023

**பிரிவு அலுவலர்**

25/07/23